விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 05 திங்கட்கிழமை (19.03.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 90

ராம்கோ RAMCO MADRAS CEMENTS LTD RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

## எம்.பிக்களான மங்கள,சிறிபதி ஆகியோரின் மாவட்ட அமைப்பாளர் பதவிகள் பறிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மாத்தறை மாவட்ட கட்சி அமைப்பாளர் பதவியிலிருந்து முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நீக்கப்பட்டுள்ளார். ஏற்கனவே சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கட்சி உறுப்பினர் நிலையிலிருந்து விலக்கப் பட்ட மங்கள சமரவீர நேற்று மாத்தறை மாவட்டத்திற்கான அமைப்பாளர் பதவியிலிருந்தும் கட்சியின் மத்திய குழுவினால் நீக்கப்பட்டுள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலையில் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

முகமாலையில் நேற்று அதிகாலை 1.10 மணியளவில் இடம் பெற்ற துப்பாக்கி மோதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் மற்றொருவர் காயமடைந்துள்ளார். முகமாலை முன்னரங்க நிலைகளில் ரோந்தில் ஈடுபட்ட படையினர் விடுதலைப்புலிகளின் முன்னரங்கப் பகுதிகளை நோக்கி தாக்கினர் பதிலுக்கு விடுதலைப்புலிகள் எதிர்த் தாக்குதலை மேற்கொண்டனர். இதில் படைத்தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மற்றொருவர் காயமடைந்துள்ளார் என்றும் புலிகள் தெரிவித்தனர். (ச)

## கல்கிசையில் தேடுதல் 38 பேர் நேற்று கைது

(கொழும்பு)

கல்கிசை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூன்று விடுதிகளில் நேற்று மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையின்போது சந்தேகத்தின் பேரில் 38 பேர் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். மூவினத்தையும் சேர்ந்த இவர்களில் 20 பெண்களும் அடங்குவதாக கல்கிசை பொலிஸ் பொறுப்பதிகாரி மகேஸ் பெரேரா தெரிவித்துள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைத் தவிர

# தென்னிலங்கை கட்சி எதனுடனும்

# புலிகள் ஒப்பந்தம் செய்யவில்லை



## இளந்திரையன் தெரிவிப்பு

(கொழும்பு)

2002 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கையைத் தவிர தெற்கிலுள்ள எந்தக் கட்சிகளுடனும் விடுதலைப்புலிகள் எந்தவொரு உடன்படிக்கையையும் செய்து கொள்ளவில்லை என விடுதலைப்புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ.இளந்திரையன் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேர்தலுக்கு முன் விடுதலைப்புலிகளுடன் ஒப்பந்தம் செய்ததாக வெளியான செய்திக்கு அவர் மறுப்புத் தெரிவித்துள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் நேற்று கிளைமோர் தாக்குதல்

(வவுனியா)

வவுனியா புளியங்குளம் நயினாமடு அனந்த புளியங்குளம் பிரதேசத்தில் நேற்று காலை 10.30 மணியளவில் கிளைமோர்த் தாக்குதலொன்று இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இத் தாக்குதல் சம்பவத்தில் 55 வயதான குலசிங்கம் என்பவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-3)

## இந்திய வெளிவிவகார அமைச்சருடன் அமைச்சர் றோகித இன்று பேச்சு!

(கொழும்பு)

இந்தியாவிற்கு நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டுள்ள வெளியுறவு அமைச்சர் றோகித போகொல்லாமக இன்று இந்திய வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இரு நாடுகளின் கடற்படையினரும் பாக்கு நீரிணையில் கூட்டாக ரோந்து பணிகளை மேற்கொள்ள இலங்கை அரசு தெரிவித்துள்ள யோசனை குறித்து இன்னமும் எந்த முடிவும் எடுக்கவில்லை என்று இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் (04 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுக் கடற்படை ரோந்து இன்னமும் முடிவு செய்யப்படவில்லை

### இந்திய பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

(கொச்சி)

தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலுக்கு முற்றுப்புள்ளி வைக்க இந்தியா-இலங்கை கடற்படை கூட்டு ரோந்து குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை என்று பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி கூறியுள்ளார்.

கூட்டு ரோந்து என்பது இன்னும் பரிசீலனையில் தான் உள்ளது. இது குறித்து எந்த முடிவும் எடுக்கவில்லை எனவும் நிருபர்களிடம் தெரிவித்தார் அந்தோனி.

தமிழக மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தாமல் இருப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று இலங்கை அரசு உறுதியளித்துள்ளது.

பாதுகாப்புத் தளபாடங்கள் கொள்முதல், இந்திய பாதுகாப்புப்படைகளுக்கு ஆயுதங்கள் மற்றும் தளபாடங்களை கொள்முதல் செய்வதில் வெளிப்படையாக கையாளப்படுகின்றன. (04 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு.படுவான்கரை நோக்கிய தாக்குதல் முறியடிக்கப்பட்டதாக புலிகள் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு படுவான்கரை நோக்கி இராணுவத்தினர் மேற்கொண்ட முன்னேற்ற முயற்சியை தாம் முறியடித்துள்ளதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

படுவான்கரை உன்னிச்சை பகுதியை நோக்கி நேற்று பிற்பகல் 2 மணியளவில் இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமது பதில் தாக்குதல் நடவடிக்கையால் இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றதாகவும் இத் தாக்குதலின்போது பண்டயினர் மூவரின் சடலங்களை தாம் மீட்டுள்ளதாக புலிகள் அறிவித்துள்ளனர்.

இம் மூன்று சடலங்களையும் இன்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கவுள்ளதாக புலிகள் தெரிவித்துள்ளனர். (எ)

## வடக்கு கிழக்கு தமிழ்த்தினப்போட்டி திருகோணமலை மாவட்டம் முதலிடம்

(திருகோணமலை)

வடக்கு கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கான சென்ற ஆண்டுக்கான தமிழ்த் தினப் போட்டிகள் திருகோணமலையில் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

இப் போட்டிகளின்போது முதலிடத்தினைப் பெற்ற போட்டியாளர்கள் அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டியில் பங்குபற்ற அனுமதிக்கப்படவுள்ளனர். (04 ஆம் பக்கம் பார்க்க)

## நாச்சிக்குடாவில் கிபீர்த் தாக்குதல்

(கிளிநொச்சி)

முழங்காவில் நாச்சிக்குடாவில் கிபீர் விமானங்கள் நடத்திய தாக்குதலில் பொதுமகன் ஒருவர் காயமடைந்துள்ளார். அத்துடன் குடியிருப்புகளும் சேதமடைந்துள்ளன என்று கிளிநொச்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் கிபிர் விமானங்கள் நாச்சிக்குடா மக்கள் குடியிருப்புக்களை அண்டிய கடற்கரைப் பகுதியில் குண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளன. (04 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளினுடையது என சந்தேகிக்கப்படும் இரண்டு கப்பல்கள் தாக்கி மூழ்கடிப்பு!

### கடற்படை தெரிவிப்பு

(கொழும்பு)

கிழக்கு கடற்பரப்பில் விடுதலைப்புலிகளுக்குச் சொந்தமானது என சந்தேகிக்கப்படும் இரண்டு கப்பல்கள் நேற்று கடற்படையினரால் தாக்கியழிக்கப்பட்டுள்ளதாக கடற்படை பேச்சாளர் கொமாண்டர் பி.டி.கே.தசநாயக்க தெரிவித்தார்.

நேற்று அதிகாலை கிழக்குக் கடற்பரப்பில் சுமார் 400 கடல்மைல் தொலைவில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய விடுதலைப்புலிகளின் ஆயுதக் கப்பல் என சந்தேகிக்கப்படும் இரு கப்பல்களை தாக்கி மூழ்கடிக்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு பெருந்தொகையான ஆயுதங்களையும் வெடிபொருட்களையும் அவர்களது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளை நோக்கி எடுத்து சென்றுகொண்டிருந்த முதலாவது கப்பல் காலை 9 மணியளவிலும் இரண்டாவது கப்பல் பிற்பகல் 12.45 மணியளவிலும் தாக்கியழிக்கப்பட்டுள்ளது. (04 ஆம் பக்கம் பார்க்க)

## சூரியகிரகணத்தை 8 நிமிடங்கள் பார்க்கலாம்

(கொழும்பு)

சூரிய கிரகணம் இன்று நிகழவுள்ளது இன்றைய சூரிய கிரகணத்தை இலங்கையில் காலை 6.08 மணிமுதல் 6.16 வரையிலான குறுகிய காலப்பகுதியில் மட்டுமே பார்வையிட முடியும். எனினும் சூரிய கிரகணம் காலை 9.15 மணிவரை நீடித்திருக்கும் என்றும் வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. (04 ஆம் பக்கம் பார்க்க)



# உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2007



## மோர்ட்டஷாவின் பந்து வீச்சில் நிலைகுலைந்தது இந்திய அணி

அசத்தலான பந்து வீச்சு, துடுப்பாட்டத்தினால் பங்களாதேஷ் அணி இந்தியாவை ஐந்து விக்கெட்டுக்களால் வீழ்த்தி உலகக் கிண்ணத் தொடரை வெற்றியுடன் ஆரம்பித்துள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் போட்ஓங் ஸ்பெயினில் நடைபெற்ற 8-வது போட்டியில் இந்திய-பங்களாதேஷ் அணிகள் மோதின. இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித் தலைவர் ராகுல் ராவிட் முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி மாஜ்லாப் பந்து வீச்சில் முன்னணித் துடுப்பாட்ட வீரர்கள் தொடர்ச்சியாக ஆட்டமிழந்தனர்.

எனினும் முன்னாள் அணித் தலைவர் சௌரப் கங்குலி மற்றும் யுவராஜ் சிங் ஆகியோர் நிதானமாக ஆடி ஓட்டங்களை ஓரளவு அதிகரித்தனர்.

இந்நிலையில் 49.3 ஓவரில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 191 ஓட்டங்களை பெற்றது. இதில் சௌரப் கங்குலி 66 ஓட்டங்களையும் யுவராஜ் சிங் 47 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் பங்களாதேஷ் அணி சார்பாக சிறப்பாகப் பந்து வீசிய வேகப் பந்து வீச்சாளர் அஸ்ரப் மோர்ட்டஷா 4 விக்கெட்டுக்களையும் சுழல் பந்துவீச்சாளராக அப்சூர் ரசாக்,மெகமட் ரபீக் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். தொடர்ந்து 50 ஓவர்களில் 192 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி தாபீம் இக்பாலிஸின் சிறப்பான ஆரம்ப அதிரடி துடுப்பாட்டத்தினால் 48.3 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 192 ஓட்டங்களைப் பெற்று 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதில் முஸ்பிகா ராஹிம் ஆட்டமிழக்காமல் 56 ஓட்டங்களையும் தாபீம் இக்பாஸ் 51 ஓட்டங்களையும் சாஹிபுல் ஹசன் 53 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஆட்ட நாயகனாக பங்களாதேஷ் அணியின் ஆரம்பப் பந்து வீச்சாளர் மோர்ட்ஷா தெரிவானார். இப்போட்டியில் தோல்வியடைந்த இந்திய அணி இன்று நடைபெறும் பெர்முடா அணியுடனான போட்டியிலும் எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறும் இலங்கையுடனான போட்டியிலும் வெற்றி பெற்றால் மாத்திரமே சூப்பர் 8ற்கு செல்ல முடியும். (ச-5)

## பாகிஸ்தான் அணி வெளியேறுகிறது

பாகிஸ்தானை மூன்று விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ள புதுமுக அயர்லாந்து அணி சூப்பர் 8ற்குச் செல்லும் வாய்ப்பை பெற்றுள்ளது. உலகக் கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற மற்றுமொரு போட்டியில் பாகிஸ்தான்- அயர்லாந்து அணிகள் மோதின.

இப்போட்டியில் பாகிஸ்தான் அணி 45.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 132 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி 41.4 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 133 ஓட்டங்களைப் பெற்று 3 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

முதலாட்டத்தில் ஸிம்பாவே அணியுடன் சமநிலை செய்த அறிமுக அணியான அயர்லாந்து அடுத்து பாகிஸ்தானை வீழ்த்தி அதிர்ச்சியளித்துள்ளது. எதிர்பாராத இந்தத் தோல்வியால் பாகிஸ்தான் அணி சூப்பர் 8 பிரிவுக்குக் கூட முன்னேற முடியாமல் உலகக் கிண்ணத்திலிருந்து வெளியேற்றப்பட்டது.

டி பிரிவில் அயர்லாந்து அணி மூன்று புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. மேற்கிந்தியத் தீவுகள் இரண்டு புள்ளிகள், ஸிம்பாவே ஒரு புள்ளி பெற்றுள்ளன.

இரண்டுலீக் ஆட்டத்திலும் தோல்வியடைந்த பாகிஸ்தான் புள்ளி எதுமின்றி கடைசி இடத்திற்குத் தள்ளப்பட்டது. ஸிம்பாவே அணியுடனான கடைசி லீக் ஆட்டத்தில் பாகிஸ்தான் வென்றாலும் சூப்பர் 8 பிரிவுக்கு முன்னேற முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)


### விற்பனைக்கு

பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சை 2007 விண்ணப்பப் படிவம் விற்பனைக்குண்டு.

*பூபாலசிங்கம் புத்தகசாலை- யாழ்ப்பாணம்.*

*எஞானம்ஸ் பிறண்டேஸ் - கந்தர்மடம்.* (830)

### தேவை

லொறி, கார், வயரிங் செய்யக் கூடிய எலக்ரிசனும் மெக்கானிக்கும் தேவை. தொடர்பு:-சிவலிங்கம் மோட்டபோஸ், 77, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம். (831)

அனுசரணை:-



சந்ததியினருக்காக எழுந்திடுவீர்

உங்களின் பிள்ளைகளுக்காகக் கொள்ளும் திட்டங்களை நடைமுறையில் வெல்ல 140% பாரிய நிதித்தொகையொன்றை வழங்கும் காப்புறுதி முதலீட்டுத் திட்டம் -மினிமுத்து

ஸ்ரீ லங்கா இன்ஷூவரன்ஸிடமிருந்து

SRI LANKA LIFE

மினிமுத்து

குழந்தைகளுக்கான திட்டம்

Sri Lanka Insurance

மேலதிக தகவல்களுக்கு:- யாழ்.பிராந்திய அலுவலகம் தொலைபேசி :- 021 222 2033


## திருவாசகமணி, திருப்புகழ் ஆய்வாளர் அமரர் க.மாணிக்கவாசகர் அவர்களின்

# நினைவு மலர்



### ஆழ்ந்து அகன்ற அறிவுக் கடல்

திருவாய்மொழி உபாசகரும், திருப்புகழ் ஆய்வாளருமான திருவாசகமணி க. மாணிக்கவாசகர் அவர்கள் அமரத்துவம் எய்தி இன்று 31ஆவது நாளாகின்றது.

ஆழ்ந்த இறைபக்தி கொண்ட இவருடைய சிந்தனைகளை ஆழம் காண முடியாது. இவர் திருவாசகத்திலே மிக்க ஈடுபாடு கொண்டவர். திருவாசகம் பற்றி ஆங்கிலத்திலே சொற்பொழிவாற்றும் திறன் இவரிடம் இருந்தது. இவருடைய சொற்பொழிவைக் கேட்ட யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் எல்லோரும் திகைத்து நின்றதை நேரில் அவதானித்துள்ளேன்.

அது மட்டுமல்ல; அருணகிரிநாதரின் திருப்புகழ் பற்றி ஆங்கிலத்தில் பேசக்கூடிய வல்லமை பொருந்திய அமரர் மாணிக்கவாசகர் பெரும் அறிவுக்கடல். அவர் மாணிக்கவாசகம் என்னும் ஒரு நூலை எழுதினார். அதிலே சமய குரவர்கள், நம்மாழ்வார், அருணகிரிநாதர், தேவி வழிபாடு, பாரத கிருஷ்ணர் அறிவுரைகள், வைகுந்த ஏகாதசி முதலியன பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இப்படியான ஒரு சிந்தனையாளனை நாங்கள் இழந்து துடிக்கின்றோம். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**லயன் சு.நித்தியானந்தன்**

**தலைவர், வடபிரதேச இந்துப் பேரவை; அகில இலங்கை சமாதான நீதிவான்**


வீ.எம்.கே. ஜுவலர்ஸ் — இல.105, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். கண்டி வீதி, சாவகச்சேரி. (-அ-636)

நியூ கல்யாணி ஜுவல்லறி — உரிமையாளர்:- லயன் சு. நித்தியானந்தன் (ஜே.பி.) (-அ-637)

வேணி களஞ்சியம் — இல.165, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (-அ-638)

லிங்கம் கிறீம் ஹவுஸ் — இல.119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (-அ-639)

சாரங்கா நகை மாடம் — இல.157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (-அ-640)

சாரங்கன் நகை மாடம் — இல.45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

எதிரிகள் நம்மை விட அறிவாளிகள் என்ற அச்சம் இருக்க வேண்டும். அப்போதுதான் நமது சூட்சும புத்தி காலமறிந்து கடமையைச் செய்யும்.

–சுவாமி இராமதாசர்

வலம்புரி

# இலங்கையில் வேரூன்றும் அமெரிக்க ஆதிக்கம்

உலக வல்லரசான அமெரிக்காவிடம் நேர்மைத் தன்மையான அரசியல் இலக்கு இல்லை என்பது தெரிந்த விடயம்.

உலக நாடுகள் முழுவதையும் தனது அதிகாரத்திற்குள் கொண்டு வரவேண்டுமென்ற ஒரே நோக்குடனேயே அதன் அசைவுகள் இருக்கும் என்பதற்கு பல சான்றுகள் இருக்கின்ற போதிலும், ஈராக் மீதான ஆக்கிரமிப்பு நல்லதோர் உதாரணமாகும்.

இரசாயன ஆயுதங்கள் இருப்பதாகக் கூறி ஈராக்கிற்குள் நுழைந்த அமெரிக்கப் படைகள் சதாம் ஹுசைனை கைது செய்ததும், பின்னர் நீதிமன்றத்தில் அவரை நிறுத்தி தூக்குத் தண்டனை வழங்கியதும் அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரல்படி நடந்தவையாகும்.

அதற்கு ஏற்றவாறு அமெரிக்காவின் திட்டம் நடந்துள்ளதை ஏற்றுத்தான் ஆக வேண்டும். கத்தோலிக்க மதத்தின் திருத்தந்தையான புனித பாப்பரசர் முதல் உலக நாட்டுத் தலைவர்கள் பலர் சதாம் ஹுசைனைத் தூக்கிலிட வேண்டாமெனக் கேட்டிருந்தும் அதனைப் பொருட்படுத்தாமல் தண்டனையை நிறைவேற்றிய அமெரிக்காவிடம் சமாதானத்திற்கான ஊக்குவிப்பை எதிர்பார்ப்பது முடியாத காரியமே.

அவ்வகையில் இலங்கையில் சமாதானம் ஏற்பட வேண்டும். அதற்காகப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்ற கதையளப்பு இலங்கைக்குள் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கான அமெரிக்காவின் திட்டம் என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

இந்துமா சமுத்திரத்தில் வல்லரசாகிவரும் இந்தியாவை அடக்க வேண்டும் என்பது அமெரிக்காவின் நீண்ட காலத் திட்டம். அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதாகவிருந்தால் இந்தியாவிற்கு அண்டை நாடுகளாக இருப்பவற்றை தனது ஆதிக்கத்திற்குள் கொண்டு வர வேண்டும் என அமெரிக்கா எண்ணுகின்றது.

அதனடிப்படையில் பாகிஸ்தான் மீது நிறையவே செல்வாக்குச் செலுத்தும் நாடாக அமெரிக்கா மாறிவிட்டது.

இதன் மூலம் இந்தியாவில் மதப் போர், வன்முறை, குண்டுவெடிப்பு என்ற நாசகாரச் செயல்கள் நடந்து கொண்டேயிருக்கின்றன. இதில் வெற்றி கண்ட அமெரிக்கா அதற்கு அடுத்தாற் போல் இலங்கையில் தனது ஆதிக்கத்தை வேரூன்றுவதற்கான திட்டங்களை தயார் செய்து விட்டது.

'பௌத்த சிங்களம்' என்ற குறுகிய சிந்தனைக்குள் சிக்கித் தவிக்கும் தென்னிலங்கை ஆட்சியாளர்கள் அமெரிக்காவின் எண்ணம் நிறைவேறுவதற்கான களத்தை அமைத்துக் கொடுகின்றன.

அதன் ஒரு கட்டமே இலங்கையின் கடல் மற்றும் விமானத் தளங்கள் அனைத்தையும் அமெரிக்கப் படைகள் பயன்படுத்தும் ஒப்பந்தமாகும்.

இப்போது அமெரிக்கப் படைகள்இலங்கைக்குள் எந்நேரமும் பிரவேசிக்க முடியும் என்ற நிலைப்பாட்டை அமெரிக்கா ஏற்படுத்தி விட்டது.

என்ன செய்வது ஒரு நாட்டிற்குள் சமாதான வழியில் தீர்வு காணும்விருப்பு இல்லாத ஆட்சியாளர்கள், நாட்டை நாசமாக்கினார்கள் என்ற வரலாறு இலங்கைக்கும் பொருந்தப் போகின்றது என்பதை மட்டும் இப்போதைக்குக் கூறிக் கொள்ளலாம்.

# வடக்கைக் குறிவைத்திருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள்!

## பத்தி எழுத்தாளர் இக்பால் அத்தாஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

வட பகுதியில் பெரும் தாக்குதல் ஒன்றிற்கான ஒத்திகைகளில் தமிழீழ விடுதலைப்புலிகள் ஈடுபட்டு வருகின்றனர் என்று சண்டே ரைம்ஸ் வார ஏட்டின் பத்தி எழுத்தாளர் இக்பால் அத்தாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சண்டே ரைம்ஸ் வார ஏட்டின் பத்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

கிழக்கு மாகாணத்திலிருந்து அதிகமான விடுதலைப்புலிகள் வடக்கிற்கு நகர்த்தப்பட்டுள்ளனர். அங்கு மிகத் தீவிரமான போர்த் தயாரிப்பு வேலைகள் இடம்பெற்று வருகின்றன. புதிய படையணிகள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளன. மண் மூட்டைகள் கொண்டு மாதிரி வடிவங்கள் அமைக்கப்பட்டு சிறப்புப்படையணிகள் தமது ஒத்திகைகளை மேற்கொண்டு வருகின்றன.

அதிகளவான கைத்துப்பாக்கி வீரர்களும் பயிற்றுவிக்கப்படுகின்றனர். அவர்கள் முக்கிய பிரமுகர்களை இலக்கு வைக்கக் கூடும். இந்தத் தயாரிப்புக்களுக்கு மத்தியிலும் விடுதலைப்புலிகளினால் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட தாக்குதல் அவர்கள் வடக்கில் தமது கவனத்தை செலுத்தியிருப்பதை தெளிவாகக் காட்டுகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை புதிதாக உருவாக்கப்பட்ட 57 ஆவது படையணியின் 10 ஆவது பட்டாலியன் நிலை கொண்டுள்ள இடத்தை துல்லியமாக கண்டறிந்த விடுதலைப் புலிகள் அவர்கள் மீது 81 மி.மீ. மோட்டார் எறிகணை வீச்சுத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

இதில் கப்டன்-1, லெப்ரினன்கள்-2, படையினர்-3 என ஆறு படையினர் கொல்லப்பட்டும் 23 படையினர் காயமடைந்துமுள்ளனர். இத் தாக்குதல் விடுதலைப்புலிகளின் வலிந்த தாக்குதலாகும். இதன் மூலம் படையினரை பதில் தாக்குதலுக்கு தூண்டியுள்ளனர்.

இதன் தொடர்ச்சி மணலாறு வரை விரிவாக்கப்படலாம். மணலாற்றில் உள்ள கிராம மக்கள் அச்சத்துடன் வாழ்கின்றனர். 10 ஆவது பட்டாலியன் மீது மோட்டார் எறிகணை வீச்சுத் தாக்குதல் தொடர்ந்து நடைபெற்றது.

விடுதலைப்புலிகள் போரிடும் வலுவை இழந்து விட்டதாகக் கூறப்படுகின்றது. இது அண்மையில் படையினரால் நடத்தப்பட்ட தாக்குதல்களின் மூலம் ஏற்பட்ட கருத்தாகும். அவர்கள் தமது சொந்த பிரசாரங்களையே நம்பத்தலைப்பட்டுள்ளனர்.

ஆனால் விடுதலைப்புலிகள் தமது கவனத்தை வட போர் முனையில் செறிவாக்குவது தெளிவாகப் புரிகின்றது. தமிழ்-சிங்கள புது வருடம் வரப் போகும் எதிர்வரும் கிழமைகளில் இந்த உண்மைகள் வெளிவரலாம் என அவர் தெரிவித்துள்ளார். (எ-5)

# மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்

## அமெ.பிரதிநிதிகள் தேவையில்லை என்கிறார் போகொல்லாகம

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்று வரும் மோதல்களை நிறுத்தி அமைதி முயற்சிகளை ஊக்குவிக்கும் முகமாக இலங்கைக்குச் சிறப்புப் பிரதிநிதி ஒருவரை நியமிக்கும்படி அமெரிக்காவின் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் விடுத்த வேண்டுகோள்களுக்கு அரசாங்கம் கடுமையான எதிர்ப்பை தெரிவித்துள்ளது.

இதனை நியூயோர்க்கிலுள்ள வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

இலங்கைக்கு சிறப்புப் பிரதிநிதி அமைக்க வேண்டிய தேவையில்லை. அப்படியான ஒரு பிரதிநிதி எமக்குத் தேவையில்லை. காங்கிரஸ் உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு நாம் ஏற்கனவே பதிலளித்துள்ளோம்.

மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்கும் எமக்கு அமெரிக்காவின் சிறப்புப் பிரதிநிதி தேவையில்லை. மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் முக்கிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்கு சிறப்பு ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. விசாரணை ஆணைக்குழுவின் மூலம் மனித உரிமை மீறல்களை இலங்கை அரசாங்கம் ஏற்கன்வே விசாரணை செய்து வருகின்றது.

இந்த விசாரணைகளை அனைத்துலக சுயாதீன அமைப்பைச் சேர்ந்த நிபுணர்கள் மேற்பார்வை செய்து வருகின்றனர். இந்தக் குழுவில் அமெரிக்காவின் பிரதிநிதிகளும் உள்ளனர்.

மனிதாபிமான நெருக்கடிகள் ஏற்படுமாகவிருந்தால் அதனைக் கையாள்வதற்கு சிறப்புச் செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்றார்.

றோகித போகொல்லாகம அவரது மூன்று நாள் அமெரிக்கப் பயணத்தின் போது கப்பிரல் கிளிற்கு சென்றதுடன் இலங்கையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக விளக்கமளித்துள்ளார்.

அவர் அமெரிக்காவின் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களான பிராங் பளோன் மத்திய கிழக்கு மற்றும் தென்னாசியாவுக்கான உப குழுவின் தலைவரான வெலர், ஹெறி அகமென் வெளிவிவகாரப் பிரதிநிதியான இலியானா றொஸ் லெற்ரின் ஆகியோரையும் சந்தித்துள்ளார். (ச-5)

# ஜெனீவாவிற்கு புதிய தூதுவர் நியமனம்

(கொழும்பு)

ஜெனீவாவிற்கான தூதுவராக கடமையாற்றி வரும் சாரள பெர்னாண்டோ ஓய்வு பெறும் நிலையில்அவரது இடத்திற்கு தயான் ஜெயத்திலக்க நியமிக்கப்படவிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றும் இவர் கடும் சிங்கள இனவாதப் போக்குடையவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# ஈச்சமோட்டை இளைஞன் கடத்தப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டையைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் அதிகாலை 3.30 மணியளவில் ஆயுததாரிகளினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஈச்சமோட்டை முதலாம் ஒழுங்கையிலுள்ள தனது வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த முத்துலிங்கம் மலரவன் (வயது-19) என்ற இளைஞனே கடத்திச் செல்லப்பட்டுள்ளார். (ந-110,3)

# பசில் ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்பினராக நியமனம் பெறுவார்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சகோதரரும் மூத்த ஆலோசகருமான பசில் ராஜபக்ஷ தேசியல் பட்டியலில் பாராளுமன்ற உறுப்பினராக நாளை நியமிக்கப்படவுள்ளதாக சுதந்திரக் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுதந்திரக் கட்சியின் செயலரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன பாராளுமன்ற செயலர் பிரியந்தினி விஜியசேகரவுக்கு இது தொடர்பில் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாகவும் தெரியவருகின்றது.

மேர்வின் சில்வாவே இவரை நியமிக்க வழிவிட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. மேர்வின் சில்வா தற்போது துணைத் தொழிலாளர் அமைச்சராகவுள்ளமை தெரிந்ததே.(ந)

# கையடக்கத் தொலைபேசிகள் மட்டக்களப்பில் செயலிழப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பயணிக்கும் இடங்களுக்கு எடுத்துச் செல்லக் கூடிய மொபைல் தொலைபேசிகள் உட்பட கம்பியில்லா தொலைபேசிச் சேவைகளுக்கான தொடர்புகள் கடந்த பத்து நாள்களுக்கு மேலாகத் துண்டிக்கப்பட்டுள்ளதால் ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 7 ஆம் திகதி இரவு முதல் எவ்வித முன்னறிவித்தலுமின்றி தொடர்புகள் துண்டிக்கப்பட்டதாகப் பாவனையாளர்கள் கூறுகின்றார்கள். மாவட்டத்தில் நிலவும் யுத்த சூழ்நிலையையடுத்துப் பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்தத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.(ச)

# பொருள்களை விநியோகிக்க கூட்டுறவுச் சங்கங்களுக்கு பணிப்பு

(யாழ்ப்பாணம்)

தங்களது இருப்பிலுள்ள அனைத்துப் பொருள்களையும் பொதுமக்களுக்கு உரிய முறையில் உடன் விற்பனை செய்ய நட வடிக்கை எடுக்குமாறு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை யாழ். அரச அதிபர் க.கணேஷ் பணித்துள்ளார்.

கட்ட ரீதியான விநியோகங்கள் எவையும் பின்பற்றப்பட வேண்டிய அவசியம் தற்போதைய சூழ்நிலையில் இல்லை. தங்கள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு உட்பட்ட பயனாளிகளுக்கு அவர்களின் பங்கீட்டு அட்டைகளில் பதிவுகளை மேற்கொண்டு பொருள்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறு அரச அதிபர் அறிவித்துள்ளார். (ச)

# விடுதலைப்புலிகளை தோற்கடிக்க மூன்று வருடங்கள் தேவைப்படும்

## பாதுகாப்பு செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இராணுவ நடவடிக்கையை தொடர்ந்து மேற்கொள்வதன் மூலம் விடுதலைப்புலிகளை முற்றாக அழிப்பதற்கு 2-3 வருடங்கள் தனக்குத் தேவைப்படுமென பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் மத்தியில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது; எதிர்வரும் 2-3 வருடங்களில் எங்களால் விடுதலைப்புலிகளை அழிக்கமுடியும். இராணுவ நடவடிக்கைகள் இடம்பெறும் அதேவேளை அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வை முன்வைக்கவுள்ளது.

இனப்பிரச்சினைக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒரு கௌரவமான தீர்வை முன்வைப்பார். இராணுவ நடவடிக்கைகள் அதிகளவு பொருளாதார இழப்புக்களை ஏற்படுத்துவது துரதிஷ்டமானது எனினும் ஜனாதிபதியும் நிதியமைச்சருமான மகிந்த ராஜபக்ஷ அதற்கான நிதியை தேடிபெற்றுக்கொள்வார்.

சம்பூர் பகுதி நிலத்தின் உரிமையாளர் ஒரு பொலிஸ் அதிகாரி என்ற முறைப்பாடு உள்ள போது அங்கு மக்களை உடனடியாக மீளக்குடியமர்த்தும் திட்டம் தமக்கு இல்லை என்றார் அவர். (ச-5)

# ஐ.நா.சபையின் தலையீடு இலங்கைக்கு தேவையற்றது

## மனித உரிமைகள் அமைச்சர் தெரிவிப்பு

சில நாடுகளும்,மனித உரிமை அமைப்புக்களும் கேட்டுக்கொள்வது போல ஐக்கிய நாடுகள் சபையின் தலையீடு அவசியமற்றது. இலங்கைக்கு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும் இடையில் ஏற்பட்டுள்ள உடன்பாட்டின் பிரகாரம் தமது பிரச்சினைகளை கையாள்வதற்குரிய ஆற்றலைக் கொண்டுள்ளது என மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

கடந்த நவம்பர் மாதத்தில் மனித உரிமைகள் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்காக இந்த உடன்பாடு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட பல உடன்பாடுகளில் ஒன்று.

ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரி றொறி மாக்வோன் இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகளுக்கு தலைமை தாங்குகிறார். வெளிநாட்டு அதிகாரிகள்,நீதிபதிகள்,மனித உரிமைகள் அமைச்சு ஆகியவற்றுடன் இணைந்து அவர் தனது பணியை ஆரம்பிப்பார்.

இந்த வேலை நடைபெறும்போது மேலதிக ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரிகள் அதில் இணைந்து கொள்வார்கள்.

விசாரணை ஆணைக்குழுவை அரசாங்கம் நியமனம் செய்ததும் வெளிநாட்டு நிபுணர்கள் குழுவின் மேற்பார்வையும் மனித உரிமைகளை மேம்படுத்துவதில் அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகளை தெளிவாக விளக்கியுள்ளது.எனவே சர்வதேச கண்காணிப்பாளர்கள் தேவையில்லை என்கிறார் அவர். (ச)

# அரசியல் பழிவாங்கல்களை அரசாங்கம் நிறுத்தவேண்டும்

## ஜே.வி.பி.கோரிக்கை

அரசாங்கத்தின் செயற்பாடுகளை அவதானிக்கும் போது அரசியல் பழிவாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது. இந் நிலைமை தொடருமானால் நாட்டின் எதிர்காலத்திற்கு அது ஆரோக்கியமாக அமையாது என்று ஜே.வி.பியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சித்து கருத்துக்களை தெரிவிப்பவர்களை பழிவாங்கும் நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக தெரிகின்றது.

அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்களை முன்வைப்பவர்கள் அடக்கு முறைகளுக்கு உட்படுகின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. இது நாட்டிற்கு ஆரோக்கியமாக அமையாது. அரசியல் கட்சி உறுப்பினர்கள் உட்பட சாதாரண மக்களை பழிவாங்கும் செயற்பாடுகளை அரசாங்கம்மேற்கொள்ளுமானால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்றார். (ச)

## சூரியகிரகணத்தை...

இந்த சூரிய கிரகணத்தை வெற்றுக் கண்களால் பார்வையிட முடியும் எனினும் சூரிய உதயத்திற்கு பின்னர் வெற்றுக்கண்களினால் பார்வையிடுவதை தவிர்த்துக் கொள்வதுடன் சிறு குழந்தைகளின் உடலில் சூரியக் கதிர்கள் படுவதை தவிர்த்துக் கொள்வது நல்லது என்றும் வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இன்றைய சூரிய கிரகணம் காலை 9.15 மணிவரை நீடித்திருந்தாலும் சூரிய உதயம் காலை 6.16ற்கு இடம் பெறுவதனால் அதற்கு பின்னர் சூரிய கிரகணத்தை தெட்டத் தெளிவாக பார்வையிடமுடியாது என்றும் தெரிவித்துள்ளது. (ச)

## புலிகளினுடையது என...

நேற்றுக் காலை கொடிகள் எதனையும் பறக்கவிடப்படாத நிலையில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிக்கொண்டிருந்த கப்பல் ஒன்றை கிழக்கு மாகாணம் அறுகம்பை கடற்பகுதிக்கு தென்கிழக்குத் திசையில் சுமார் 195 கடல் மைல் தொலைவில் முதலில் கடற்படையினர் அவதானித்துள்ளதாகவும் பின்னர் அக் கப்பலுடன் தொடர்பினை ஏற்படுத்தி அடையாளத்தை உறுதிப்படுத்தும்படி கேட்டுக்கொண்டதாகவும் அதற்கமைய அக் கப்பலினால் வழங்கப்பட்ட தகவல்கள் முரண்பட்டுக் காணப்பட்டதனால் அதனை சோதனையிடுவதற்காக நிறுத்தும்படி கோரப்பட்டது.

அதற்கு இணங்க மறுத்த அக்கப்பல் மேலும் ஆழ்கடல் பகுதியை நோக்கி செல்ல எத்தனித்தபோது கடற்படையினர் எச்சரிக்கை வேட்டுக்களை தீர்த்துள்ளனர். அதற்குப் பதிலாக அக் கப்பலில் இருந்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பின்னர் கடற்படையினர் திருப்பித்தாக்கிய போது கப்பல் தீப்பற்றி எரிந்து பாரிய வெடிச் சத்தங்களுடன் கடலில் மூழ்கியதாக கடற்படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

இச் சம்பவத்தினை அடுத்து அப் பகுதிக்கு மேற்காக சுமார் 15 கடல் மைல்தொலைவில் இன்னொரு சந்தேகத்திற்கிடமாக கப்பலை அவதானித்து பின் தொடர்ந்து சென்ற கடற்படையினர் மீதும், அக் கப்பலில் இருந்து தாக்குதல் நடத்தப்பட்டது.

இதன்போது கடற்படையினர் திருப்பித் தாக்குதல் நடத்தியதில் அக் கப்பலும் வெடித்து சிதறி கடலில் மூழ்கியது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இக் கப்பல்கள் எங்கிருந்து வந்து கொண்டிருந்தன என்ற சரியான தகவல் தம்மிடம் இல்லை எனவும் ஆனாலும் இக் கப்பல்கள் தெற்குப் பகுதியிலிருந்து வடக்கு நோக்கி சென்று கொண்டிருந்ததை தம்மால் உறுதிப்படுத்த முடியும் என்றும் கூறினார்.

இச் சம்பவங்களின்போது இவ்விரு கப்பல்களில் பயணித்த சுமார் 20 தொடக்கம் 24 வரையான விடுதலைப்புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று தான் நம்புவதாகவும் சம்பவம் இடம் பெற்ற பகுதிகள் கடற்படையினரால் தேடுதல் நடவடிக்கை இடம் பெற்று வருவதாகவும் கடற்படைப் பேச்சாளர் மேலும் கூறினார்.

இத்தாக்குதல் சம்பவம் குறித்து விடுதலைப் புலிகள் தரப்பில் தகவல் ஏதும் வெளியாகவில்லை. (ச-3)

## நாச்சிக்குடாவில்...

பூநகரியில் இருந்து இடம் பெயர்ந்து வந்து மக்கள் மேற்படி இடத்தில் தற்காலிக குடியிருப்புக்களில் வாழ்ந்து வருகின்றனர். இந்த மக்களின் .குடியிருப்புக்கள் மீதே இத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இதில் இரண்டு குடிசைகள் உட்பட மூன்று வீடுகள் சேதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## கூட்டு...

அனைத்துக்கொள்முதல் பேரங்க ளையும் பாதுகாப்பு அமைச்சர் தலைமையி லான 12 உறுப்பினர்கள் கொண்ட குழு ஆய்வு செய்யும்.

கடற்படைக் கண்காணிப்பு,கடலோரக் கண்காணிப்பை வலுப்படுத்த மேலும் மூன்று கண்காணிப்புக் கப்பல்களை வாங்க அரசு முடிபு செய்துள்ளது. இந்திய கடற்படையிடம் ஆளில்லா உளவு விமானம் ஏற்கனவே உள்ளது. கண்காணிப்புப் பணியில் மேலும் பல ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தப்படவுள்ளன என்றார் அவர். (ச-5)

## வடக்கு கிழக்கு...

இப் போட்டிகளில் யாழ்ப்பாணம்,மட்டக்களப்பு,வவுனியா,திருகோணமலை,மன்னார் மற்றும் கல்முனை மாவட்டங்களின் 12 கல்வி வலயங்களைச்சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இப் போட்டியில் முதலிடத்தினை திருகோணமலையும் இரண்டாம் இடத்தினை மட்டக்களப்பும் மூன்றாம் இடத்தை வவுனியா தெற்கு கல்வி வலயமும் பெற்றுக்கொண்டன.

இதேவேளை கிளிநொச்சி,முல்லைத்தீவு, அம்பாறை ஆகிய பிரதேசங்ளைச் சேர்ந்த கல்வி வலயங்களின் மாணவர்கள் இப் போட்டிகளில் கலந்து கொள்ளவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-3)

## தென்னிலங்கை கட்சி...

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இரகசிய உடன்பாடு ஒன்று கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது 2005 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டிருந்ததாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நீக்கப்பட்ட அமைச்சர்களான மங்கள சமரவீர ,சிறிபதி சூரியாராட்சி ஆகியோர் தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பாக விசாரணைகளை நடத்துவதற்கு நாடாளுமன்ற விசாரணைக்குழுவை நியமிக்க வேண்டும் எனவும் அவர்கள் கேட்டிருந்தனர்.

இது ஒரு தவறான பிரசாரம். இப்படித்தான் தென்பகுதி அரசியல்வாதிகள் அரசியல் விளையாட்டுகளில் ஈடுபடுவதுண்டு அவர்களுக்குள் முரண்பாடுகள் வரும்போது விடுதலைப்புலிகளை அவர்கள் அதற்குள் இழுப்பதுண்டு எனவும் இளந்திரையன் மேலும் தெரிவித்தார்.

ஆனால் இளந்திரையனின் பதில் தெளிவாக புரியக் கூடியது. அவர்களுக்கு இடையில் ஒப்பந்தங்களோ அல்லது புரிந்துணர்வுகளோ இருந்தாலும் அதனை வெளியில் தெரிவிக்க மாட்டார்கள். அதனால் தான் அவர்கள் தமிழ் மக்களின்ஆதரவை கொண்டுள்ளார்கள். எனவே அவர்கள் தமது உத்தியோகபூர்வமான நிலைப்பாட்டை தற்போது எடுத்துள்ளார்கள் என இளந்திரையனின் பதில் தொடர்பாக கருத்துக் கூறினார் மங்கள் சமரவீர.ஜே.வி.பியும்,ஹெல உறுமயவும் இந்த ஒப்பந்தம் தொடர்பான உண்மைத்தன்மையை அறிவதற்கு அது முழுமையாக விசாரணை செய்யப்பட வேண்டும் என்ற நிலைப் பாட் டைக் கொண்டுள்ளன.

அரசாங்கத்தின் மீது இந்த குற்றத்தை சுமத்தியவர்கள் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் முன்னணி உறுப்பினர்கள் என்பதுடன் தேர்தல் பிரசாரத்தின் போதும் முன்னின்றவர்கள். எனினும் அரசாங்கம் இதனை மறுத்துள்ளது. ஆனால் யார் சொல்வது உண்மை என்பது ஒருவருக்கும் தெரியாது என ஜே.வி.பியின் முன்னணி உறுப்பினர்களில் ஒருவரான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (ச-5)

**தொழில் பயிற்சி வகுப்புக்கள்**

i.Radio,T.V.,Video Deak
ii.Electrical Wiring
iii.Rewinding
iv.Refrigerator & Air Conditioning
v.Dip. in Electrical & Electronic Technology

குறுகிய கால தொழிற் பயிற்சி வகுப்புக்கள், முழு நேர செயன் முறைப் பயிற்சியுடன் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

விபரங்களுக்கு:-07 பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
0777250914 (C-651)

## இந்திய...

ஏ.கே.அந்தோனி தெரி வித்துள்ளார்.

இலங்கை அரசு தெரிவித்திருப்பது ஒரு திட்டமே. அது குறித்து எந்தமுடிபும் எடுக்கப் படவில்லை என்று செய்தியாளர்களிடம் பேசும்போது அந்தோனி நேற்றுத் தெரிவித்துள்ளார். இந் நிலையில் ரோகித போகொல்லாகம இன்று வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜியை சந்தித்துகலந்துரையாடவுள்ளார்.

இதன்போது மீனவர்கள் மீதான அண்மைய தாக்குதல்கள் சம்பவம் குறித்து விவாதிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இச் சந்திப்பினை அடுத்து பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி உட்பட மேலும் பலர் இந்திய அமைச்சர்கள் மற்றும் தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாட இலங்கை அமைச்சர் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. (ச-3)

## கல்கிசையில்...

சந்தேகத்திற் கிடமான முறையில் சிலர் நடமாடுவதாக கிடைத்த தகவலையடுத்து பொலிஸாரால் நேற்று நண்பகல் 12 மணிதொடக்கம் 2 மணிவரை இச் சோதனை நடத்தப்பட் டுள்ளது. கைதுசெய்யப்பட்டவர்களிடம் விசாரணை இடம் பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-3)

## எம்.பிக்களான...

இதேநேரம் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மாத்தறை மாவட்ட அமைப்பாளர் பதவிக்கு டலஸ் அழகப்பெருமாள் கட்சியின் மத்திய குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேபோன்று குற்றப்புலனாய் வாளர்களால் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் சிறிபதி சூரியாராட்சியும் களனி மாவட்ட அமைப்பாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என கட்சியின் மத்திய குழு அறிவித்துள்ளது. (ச-5)

**மரண அறிவித்தல்**

**திருமதி எதிர்வீரசிங்கம் மகேஸ்வரி**

பண்ணாகம் சுழிபுரத்தைச் சேர்ந்த திருமதி எதிர்வீரசிங்கம்-மகேஸ்வரி 18.03.2007 அன்று காலமானார். அன்னார் காலஞ் சென்ற அப்பச்சி-எதிர்வீரசிங்கம் (இளைப்பாறி ஆசிரி யர்) அவர்களின் அன்பு மனைவியும், செல்வி லோகநாயகி (தாதி உத்தியோகஸ்தர், யாழ்.போதனா வைத்தியசாலை),திருமதி கருணேஸ்வரன்-மங்கள ராணி (ஜேர்மனி), தவயோகன் (ஜேர்மனி), திருமதி குமரகுரு பவளகுமாரி (ஆசிரியை யா/சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி), குபேந்திரன் (ஜேர்மனி), செல்வக்குமாரன் (ஆசிரியர் யா/காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியாசாலை), திருமதி ஜெகதீஸ்வரன் மோகனா (யா/சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாசாலை) ஆகியோரின் பாசமிகு அன்னையும்,

கருணேஸ்வரன் (ஜேர்மனி), பவளராணி (ஜேர்மனி), குமரகுரு, வசந்தினி (ஜேர்மனி), முகுந்தினி (பிரதேச செயலகம் உடுவில்), ஜெகதீஸ்வரன் (ஆசிரியர் யா/வட்டு மத்திய கல்லூரி) ஆகியோரின் மாமியும், காங்கேயன், கோகுலன், சோபிதன் (இலங்கை), துஷாந், ராகுல் சாருஷன், அபிராம்,சபினா, சகானா, மேகலன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும்,

காலஞ்சென்ற சபாநாயகர் (கணக்காளர்), திருமதி புவனேஸ்வரி- சீவரத்தினம் (கனடா) பரமானந்தம் (பொறியியலாளர் கொழும்பு) ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 19.03.2007 இன்று 12 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக திருவடிநிலை மயானத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ,நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்

(832)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.03.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.